இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in · நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி · murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 271 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 29 – திங்கள்கிழமை 12 மே 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 271 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 29 - Monday 12 May 2025 - Dak 12 Pages ₹ 5.00




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.5.2025) இந்திய இராணுவத்திற்கு துணை நிற்கும் பேரணி, சென்னையிலுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து காமராசர் சாலையில் உள்ள போர் நினைவுச்சின்னம் வரை நடைபெற்றது. இப்பேரணியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல் துறை உயர் அலுவலர்கள், முன்னாள் படைவீரர்கள், அனைத்து மத தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# தமிழ்நாடு, இந்தியாவில் முதலிடம்!

## ஏற்றுமதியில் – வேலைவாய்ப்புகளில் – சமூக அளவீடுகளில் – உயர்கல்வி சேர்க்கையில் – புத்தாக்கத் தொழில்களில் தொடர்ந்து சாதனை!

**சென்னை, மே 12 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒப்பற்ற தலைமையின் கீழ் திராவிட மாடல் அரசின் முதன்மைத் திட்டங்களால் 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.**

**ஏற்றுமதியில் தமிழ்நாடு இருமடங்கு சாதனை! மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்! வேலைவாய்ப்புகள் வழங்குவதில் சாதனை! சமூக அளவீடுகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்! உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் முதலிடம்! வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பு! தோல் பொருள் - ஜவுளித் தொழில் உற்பத்தியில், புத்தாக்கத் தொழில்களில் தமிழ்நாடு முதலிடம் என பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் முதலமைச்சராக பொறுப்பேற்றார்கள். அப்பொழுது கொரோனா தொற்று தமிழ்நாட்டை ஆட்டிப்படைத்தது. உயிர்ப்பலிகள் வாங்கியது. கொரோனா தொற்று ஏற்படும்போது அச்சத்தில் ஒருவருடன் ஒருவர் சந்திப்பதைக் கூடத் தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் அச்சம் சிறிதுமின்றி, கொரோனா ஒழிப்பில் ஈடுபட்டு மக்களைப் பாதுகாத்த மகத்தான பணிகளை பத்திரிகைகள் பாராட்டின. இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராகப் போற்றப்பட்டார். நான் பாராட்டப்படுவதைவிட இந்தியாவில் தமிழ்நாடுதான் முதல் மாநிலமாக முன்னேற்றம் அடைவதையே விரும்புகிறேன். அதுதான் எனக்கு மகிழ்ச்சி தரும் என்று கூறி அந்த இலக்கினை அடைந்திட அயராது பாடுபட்டார்.

### தொழில் ஒப்பந்தங்கள்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர் முயற்சிகளால், தொழிற்சாலைகள் புதிது புதிதாகத் தொடங்கப்பட, நம் நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுக்கும் சென்று செய்து கொள்ளப்பட்ட 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஈர்த்துள்ள ரூ.10,27,547 கோடி புதிய முதலீடுகள், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள 32.23 இலட்சம் வேலைவாய்ப்புகள் காரணமாகத் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் எனப் புகழப்படுகிறது. முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்பான நடவடிக்கைகளால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவில்



வேறு எந்த மாநிலமும் அடையாத வளர்ச்சியாக 9.69% வளர்ச்சி கண்டு இந்தியாவில் முதல் மாநிலம் எனும் பெருமையைப் பெற்றுள்ளது.

### ஏற்றுமதியில் தமிழ்நாடு இருமடங்கு சாதனை!

திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில் 2020-2021இல் 26.15 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருந்த ஏற்றுமதி 2024-2025இல் 52.07 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருமடங்கு உயர்ந்து சாதனை படைத்தது.

### மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்!

மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதியில் மராட்டியம், உத்தரப்பிரதேசம், கர்நாடகம், ஆகிய மாநிலங்களைவிட அதிகமாக 14.65 பில்லியன் டாலர் மதிப்புடைய மின்னணுப் பொருள்களை ஏற்றுமதி செய்து இந்தியாவில் முதலிடம் எனும் பெருமையைப் பெற்றுள்ளது தமிழ்நாடு.

### வேலைவாய்ப்புகள் வழங்குவதில் சாதனை!

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அரசுத் துறைகள் மூலமாகவும், தனியார் துறையிலும், வேலைவாய்ப்புகளை வழங்குவதில் திராவிட மாடல் அரசு தனிக்கவனம் செலுத்தியது. அதனால், 2020-2021இல் 2.9 கோடியாக இருந்த தொழிலாளர் எண்ணிக்கை 2024-2025இல் 3.87 கோடியாக உயர்ந்து வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

### சமூக அளவீடுகளில் முன்னணி மாநிலம்!

திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், கலைஞர் கனவு இல்லம், முதலான புரட்சிகரமான திட்டங்களால் தமிழ்நாடு அபரிமிதமான வளர்ச்சிகளைக் கண்டு இந்திய மாநிலங்களில் முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

### உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் முதலிடம்!

உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய அளவில் 26 சதவிகிதமாக இருப்பது 2023-2024ல் 51.3 சதவிகிதமாக உயர்ந்து தமிழ்நாட்டின் மகத்தான சாதனையை வெளிப்படுத்துகிறது.

### சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு!

முதலமைச்சர் அவர்களின் சீரிய நிர்வாகத் திறன்களால் மாநிலம் எங்கும் பெரிய அளவில் சாதி மோதல்களோ, தொழிற்சாலைகளில் பிரச்சினைகளோ இல்லாமல் கடந்த நான்கு ஆண்டு காலமும் தமிழ்நாட்டில் அமைதி நிலவுவது மாநிலத்தில் நிலையான வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்